## மெட்ரோ ரெயிலில்

# பயணிகள் எண்ணிக்கை 1 லட்சத்தை தாண்டியது!

## நாளுக்கு நாள் அதிகரிப்பு!!

சென்னை, மே. 11–

மெட்ரோ ரெயிலில் பயணிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போது இந்த எண்ணிக்கை 1 லட்சத்தை தாண்டி உள்ளது.

சென்னையில் மெட்ரோ ரெயில் கடந்த 2015–ம் ஆண்டு ஜூன் மாதம் ஓட தொடங்கியது.

அப்போது ஆலந்தூரில் இருந்து கோயம்பேடு மட்டுமே ரெயில் ஓடியது. அந்த சமயத்தில்தினசரி15ஆயிரம் முதல் 25 ஆயிரம் பயணிகளே பயன்படுத்தினர். தற்போது 2 பாதைகளிலும் முதல்கட்ட பணி முடிந்து, ரெயில்ஓடிக்கொண்டிருக்கிறது. இதனால் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்தபிப்ரவரிமாதத்தில் மட்டும் 26 சதவீதம் உயர்ந்துள்ளது. சராசரியாக தினசரி 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயணம் செய்கிறார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் 24 லட்சத்து30ஆயிரம்பேர்பயணம் செய்துள்ளனர்.

விமானம் நிலையம் முதல்வண்ணாரப்பேட்டை பாதை திறந்த பிறகு பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்திருப்பதுகுறிப்பிடத்தக்கது.

இந்த பாதையில் அண்ணாசாலை, எல்ஐசி, ரெயில் நிலையங்களில் இன்னமும் முழுமையான வசதிகள் செய்யப்படவில்லை.

கூடுதல் வாசல்கள் திறக்கப்படவில்லை.

இருந்த போதிலும் அரசு அலுவலர்கள்அதிகம்இருப்பதால்இங்குபயணிகள்எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேலும்மெட்ரோரெயில் ஓடும் நேரம் அதிகரிக்கப்படுகிறது.

அதிகாலை 4 மணிக்கே ரெயில்கள் ஓடுவதால் விமான பயணிகள் அதிகம் பேர் மெட்ரோ ரெயிலை பயன்படுத்துகின்றனர். மேலும் அலுவலக நேரங்களில் பயணிகள் நின்றுகொண்டு பயணம் செய்யும் அளவுக்கு கூட்டம் அதிகரித்துள்ளது.